செ.வெ.எண் : 22/ ஏப்ரல்　　　　　　　　　　　　　　　　　　　　　நாள் : 23.04.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## தேர்தல் வாக்கு எண்ணும் பணிகள் தொடர்பாக நுண்பார்வையாளர்களுக்கு பயிற்சி

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (23.04.2021) மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சட்டமன்ற பொதுத்தேர்தல்-2021 வாக்கு எண்ணிக்கை பணியில் ஈடுபடும் நுண்பார்வையாளர்களுக்கான பயிற்சி நடைபெற்றது.

பயிற்சின் போது மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை வருகிற 02.05.2021 அன்று காலை 8.00 மணி முதல் இராமநாதபுரம் அண்ணா பல்கலைக்கழக அரசு பொறியியல் கல்லூரியில் நடைபெற உள்ளது. இந்திய தேர்தல் ஆணையத்தின் ஆணையின்படி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பதிவான வாக்குகளை எண்ணுவதற்கு ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு தலா 14 மேசைகளும், தபால் வாக்குகளை எண்ணுவதற்கு தலா 8 மேசைகளும் நிர்ணயிக்கப்பட்ட அறைகளில் தனித்தனியாக அமைக்கப்படும். ஒவ்வொரு மேஜையிலும் ஒரு நுண்பார்வையாளர் (Micro Observer), வாக்கு எண்ணிக்கை மேற்பார்வையாளர் (Counting Supervisor), வாக்கு எண்ணிக்கை உதவியாளர் (Counting Assistant) பணியில் ஈடுபடுவார்கள்.

வாக்கு எண்ணிக்கை தொடங்குவது முதல் இறுதி வரை நுண்பார்வையாளர்களின் பணி மிகவும் முக்கியமானதாகும். வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கான சட்டமன்றத் தொகுதி மற்றும் எந்த மேஜையில் பணியாற்றிட வேண்டும் என்பது குறித்து கணினி முறையில் பணி ஒதுக்கீடு செய்யப்படும். முதலில் தபால் வாக்கு எண்ணும் பணிகள் தொடங்கப்படும். தொடர்ந்து, மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்படும். ஒரு சுற்று எண்ணிக்கைக்கான மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் பாதுகாப்பு அறையில் இருந்து எடுக்கப்பட்டு சுற்று முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்பு, அடுத்த சுற்றுக்கான வாக்குப்பதிவு எந்திரங்கள் எடுக்கப்படும்.

நுண்பார்வையாளர்கள் வாக்கு எண்ணிக்கையின் போது தங்களுக்கு வழங்கப்படும் வாக்குப்பதிவு எந்திரங்களின் வரிசை எண்ணை 17சி படிவத்துடன் ஒப்பிட்டு சரிபார்த்து, தங்களுக்கு ஒதுக்கப்பட்டது தானா என்பதை உறுதி செய்ய வேண்டும். வாக்கு எண்ணிக்கை முடிவுக்கான பொத்தானை அழுத்தியவுடன் கட்டுப்பாட்டு கருவி முகவர்கள் பார்வைக்கு தெளிவாக தெரியும் வகையில் வைக்க வேண்டும். கட்டுப்பாட்டு கருவியில் வரும் முடிவுகளை இரு பிரதிகள் தயாரித்து வேட்பாளர்களின் முகவர்களிடம் கையொப்பம் பெற்ற பின்பு சம்மந்தப்பட்ட சட்டமன்றத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும். தேர்தல் நடத்தும் அலுவலர் ஒவ்வொரு சுற்று வாரியாக மொத்த வாக்கு எண்ணிக்கை விபரங்களை அறிவிப்பார் என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இப்பயிற்சில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திருமதி.க.நஜிமுன்னிசா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.காத்திக், தேர்தல் பயிற்சி பொறுப்பு அலுவலர்/ உதவி மகளிர் திட்ட அலுவலர் திரு.கிருஷ்ணகுமார், வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடும் நுண்பார்வையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**